Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 286/2024

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 - வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், பெஞ்ச் கிளார்க் கிரேட் - 3 அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | ஆட்டோ ஓட்டுநர் |
| பெயர். | - | பிரதீப் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ஆனந்தன் | சமயம் | - | |
| கிராமம் | - | அரசூர் | வயது | - | 35 |

13.03.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அரசூரில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 5-6 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் சுமார் 01.00-01.30 மணியளவில் இளவரசு என்பவரை பார்ப்பதற்காக அவர் வீட்டிற்கு சென்றிருந்த போது போலீசார் இளவரசு என்பவரிடமிருந்து ஒரு சி.டி.-ஐ கைப்பற்றினார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்தேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகும்.**

2. மேற்படி சி.டி.-யில் திருமாவளவன் ஒரு நபரின் காலை நக்குவது போல் படம் இருந்தது. **என்னிடம் காட்டப்படும் சம்பவத்தின் போது போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றிய சி.டி. சா.பொ. 1 ஆகும்.** தற்போது நீதிமன்றத்தில் கணினியில் திரையில் தோன்றும் புகைப்படம் தான் அது என்றால் சரிதான். என்னிடம் போலீசார் ஜெராக்ஸ் போட்ட புகைப்படம் ஒன்று காட்டினார்கள். சென்டரில் சென்று அங்கு சிஸ்டத்தில் போட்டு இதை காண்பித்தார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது நான் இருந்தேனா என்றால் இல்லை. சம்பவம் தொடர்பாக போலீசார் எந்த தேதியில், எந்த நேரத்தில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் என்றைக்கு என்று தெரியவில்லை, மதியம் சாப்பிடும் சமயத்தில் 01.00-01.30 இருக்கும். போலீசார்

கையெழுத்து கேட்டார்கள் கையெழுத்து மட்டும் போட்டேனா என்றால் ஆமாம், இளவரசு சி.டி . இருக்கிறது, இதை போலீசிடம் ஒப்படைக்கிறேன், அதை நீ பார்த்தற்காக கையெழுத்து போடு என்று சொன்னார்.

2. எதற்காக இளவரசு வீட்டிற்கு போனேன் என்றால் பிறந்தநாள் பத்திரிக்கையில் ஒன்றிய பொறுப்பில் யார் யார் பெயரை போடுவது என்று கேட்பதற்கு போனேன். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அந்த இடத்தில் எனக்கு வீடு இல்லை என்றால்சரிதான். என்னுடன் யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் ராகவேந்திரன் (எ) ஜீவன் போட்டார். யார் முதல் கையெழுத்து போட்டது என்றால் ஜீவன் போட்டார்.

3. எத்தனை இடத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு இடத்தில் தான். எந்த போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் திருவெண்ணெய்நல்லூர் போலீசார் விசாரணை செய்தார்கள், எந்த அதிகாரி என்று தெரியவில்லை. சி.டி. கைப்பற்றியதாக சொல்கிறேனே அது எந்த கம்பெனி சி.டி. என்றால் அது எனக்கு தெரியாது.

4. நான் கட்சியில் எந்த பொறுப்பில் அப்போது இருந்தேன் என்றால் முகாம் பொறுப்பாளர். ஜீவன் எந்த பொறுப்பில் இருந்தார் என்றால் டிசைனிங் பண்ணுவார், அவர் எங்களுடைய கட்சியில் இல்லை, வீட்டில் உள்ளவர்கள் இருக்கிறார்கள் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளவர்கள் அனைவரும் எங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம்.

5. நான் வி.சி.க கட்சிக்காரர் என்றும் அ.மா. இளவரசனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. தற்போது வி.சி.க -வில் எந்த பொறுப்பில் உள்ளேன் என்றால் எதுவும் இல்லை. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும், அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக இளவரசன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. என்னிடம் போலீசார் ஜெராக்ஸ் போட்ட புகைப்படம் ஒன்று காட்டினார்கள் என்றும், சென்டரில் சென்று அங்கு சிஸ்டத்தில் போட்டு இதை காண்பித்தார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனே இதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எந்த சென்டர் என்னை அழைத்துச்சென்றார்கள், அந்த கடை பெயர் தெரியுமா என்றால் கடை பெயர் தெரியாது. எத்தனை மணிக்கு சென்டரில் சென்று காண்பித்தார்கள் என்றால் 02.00 மணியிருக்கும். அதன் பிறகு காவல் நிலையம் வந்தேனா என்றால் வரவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 286/2024

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், பென்ச் கிளார்க் கிரேட் - 3 அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | பொறியாளர் |
| பெயர். | - | கிருபாநிதி | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ஜெயபாலன் | சமயம் | - | |
| கிராமம் | - | காரப்பட்டு | வயது | - | 36 |

13.03.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது காரப்பட்டில் வசித்து பொறியாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 தெரியும். இந்த வழக்கின் எதிரி சுரேந்தர் எங்க ஊர் பக்கத்து ஊரான குமாரமங்கலத்தை சேர்ந்தவர் ஆவார். எங்கள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், எழுச்சி தமிழர் மற்றொரு அரசியல் கட்சியின் தலைவரின் காலணியை நக்குவது போல் வர்மா காட்டூன் என்ற முகநூல் பக்கத்தில் வரைந்து பதிவேற்றம் செய்திருந்தார்.

2. மேற்படி புகைபடத்தை நான் கடந்த 18.05.2020 ந் தேதி காலை 07.00 மணியளவில் எனது செல்போனில் முகநூல் சென்றிருந்த போது பார்த்தேன். பிறகு எனது கட்சியை சேர்ந்த ஒன்றிய செயலாளர் வடிவேல் என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சுரேந்தர் பற்றி என்னிடம் விசாரித்தார்.

3. பின்பு இது சம்மந்தமாக திருவெண்ணெய்நல்லூரை சேர்ந்த எனது கட்சியை சேர்ந்த இளவரசு என்பவர் புகார் கொடுப்பதற்காக என்னை அழைத்தார். நான் காவல் நிலையம் சென்றேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பி.இ சிவில் படித்துள்ளேன். தொல்.திருமாவளவன், எழுச்சி தலைவர் வரைபடத்தை பார்த்ததாக சொல்கிறேனே எதில் பார்த்தேன் என்றால் பேஸ்புக்கில் காலை 07.00 மணிக்கு பார்த்தேன். இந்த விவரத்தை நான் யாரிடம் சொன்னேன், என்னிடம் யார் கேட்டது என்றால் வடிவேல் என்பவர் எனக்கு போன் செய்து, இது மாதிரி படம் போட்டது உங்க ஊர் பக்கத்து ஊர் தானா அவர் பற்றி உனக்கு தெரியுமா என்று கேட்டார். அந்த விவரத்தை போலீசார் விசாரித்த போது சொன்னேனா என்றால் சொன்னேன்.

2. நான் 07.00 மணிக்கு பார்த்தேன், அவர் எத்தனை மணிக்கு எனக்கு போன் செய்தார் என்றால் 08.30 மணியிருக்கும். அவர் போன் செய்து கேட்ட பிறகு யார் யார் காவல் நிலையம் சென்றோம் என்றால் இளவரசு, வடிவேல், சமத்துவன் (எ) சத்தியராஜ், நானும் , மற்றும் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் 20 பேர் சென்று புகார் கொடுத்தோம். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தோம் என்றால் 11.30 மணிக்கு மேல் போனோம், 12.00 மணிக்கெல்லாம் புகார் கொடுத்துவிட்டோம்.

3. புகாரை யார் எழுதினார் என்றால் இளவரசு எழுதினார். புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் உள்ளே இருந்தார், நான் வெளியே இருந்தேன். பொதுவாக முகநூல் பக்க கணக்கு உருவாக்க ஒருவரின் கைப்பேசி எண்ணோ, மின்னஞ்சல் முகவரியோ வேண்டுமென்றால் சரிதான். எந்த காவலர் என்னை விசாரணை செய்தார் என்றால் எஸ்.ஐ விசாரணை செய்தார்.

4. போலீசார் காவல் நிலையத்தில் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் உள்ளே வைத்து விசாரணை செய்தார். என்னை போலீசார் அரசூரில் வைத்து அன்றைக்கே விசாரித்தார்கள். மற்றவர்களை தனிப்படை போலீசார் வந்து விசாரித்தார்கள், என்றைக்கு என்று தெரியவில்லை. என்னை விசாரித்த போது மதியம் 01.00 மணியிருக்கும்.

5. அந்த சமயத்தில் கட்சியில் என்ன பொறுப்பில் இருந்தேன் என்றால் மாவட்ட துணை அமைப்பாளர், பொறியாளர் அணி. எங்கள் தலைவரின் முகநூலில் வரைபடம் போட்டதாக சொல்வதை அவர் பார்த்திருப்பார், அவர் எதாவது தனி புகார் கொடுத்தாரா என்றால் அவர் கொடுக்கவில்லை, கட்சி சார்பாக நாங்கள் கொடுத்தோம். தமிழ்நாட்டில் வேறு எங்கேயாவது கட்சி சார்பாக புகார் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள்.

6. எதிரியை எங்கு வைத்து போலீசார் கைது செய்தார்கள் என்றால் தனிப்படை எதிரியை கைது செய்ததாக சொன்னார்கள், எங்கு வைத்து கைது செய்தார்கள்என்று தெரியவில்லை, அவர்கள் கைது செய்து இட்டு போன போது பார்த்தோம், அருகில் போகவில்லை. இந்த வழக்கில் சாட்சியாக உள்ளவர்கள் எல்லோரும் எங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

7. எதிரியை கைது செய்து போன போது பார்த்தேன் என்று சொல்கிறேனே எப்போது கைது செய்தார்கள் என்றால் 03.00 மணியிருக்கும். எதிரியின் முகநூல் பக்கத்தின் தொலைபேசி எண்ணையோ, மின்னஞ்சல் முகவரியோ குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8. பொதுவாக முகநூல் பக்கத்தில் ஒருவருடைய பெயரில் பேக் ஐடியாக கிரியேட் பண்ண வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது, ஆனால் வர்மா கார்டூனிஸ்ட் அபிசியல் ஐடியில் தான் இருந்தார். இந்த வழக்கில் சாட்சியாக உள்ளவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள் அல்ல வெளியூர்காரர்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த புகாருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், எங்கள் கட்சியில் பதவி உயர்வு பெறுவதற்காகவும், சுயவிளம்பரத்திற்காகவும் இளவரசு என்பவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் மறுக்கிறேன். தற்போது இளவரசு என்ன பொறுப்பில் உள்ளார் என்றால் மாவட்ட செயலாளர், இளைஞர் அணி எழுச்சி பாசறை.

9. அ.சா.1 சொல்வது போல் சமூக வலைதளத்தில் முகநூல் பக்கத்தில் சொன்ன தேதியில் , சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் அப்படி ஒரு நிகழ்வும் நடக்கவில்லை என்றும், யாரோ போட்ட படத்தை எதிரி கார்டூன் வரைபவர் என்று தெரிந்தே அ.சா.1 எதிரி மீது பொய்யக புகார் கொடுத்துள்ளார், அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.